Dementia UK
Helping families face dementia

# அட்மிரல் செவிலியர்கள்

## குடும்பங்களுக்குத் தேவைப்படுகின்ற சிறப்பு மறதிநோய் ஆதரவு

'Admiral Nurse'

Tamil (Sri Lanka)

# அட்மிரல் செவிலியர்கள்

மறதிநோய் பாதிப்புடன் வாழ்வது என்பது சில நேரங்களில் கடினமானதாகவும் தனிமையான உணர்வைத் தரக்கூடியதாகவும் இருக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம்.

மறதிநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு நாளும் மிகவும் நேர்மறையாக வசிப்பதற்கு அவர்களுக்குத் தேவைப்படுகின்ற ஒருவருக்கு ஒருவர் முறையிலான ஆதரவையும், வல்லுநர் வழிகாட்டுதலையும், நடைமுறைத் தீர்வுகளையும் வழங்குவதற்கு அட்மிரல் செவிலியர்கள் ஒன்றிணைந்து செயல்படுகிறார்கள்.

பெரும்பாலான அட்மிரல் செவிலியர்கள் சமுதாயத்தில் NHS க்காகப் பணியாற்றுகிறார்கள், மற்றவர்கள் வீடுகள், மருத்துவமனைகள் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் பணிபுரிகிறார்கள்.

# ஒரு அட்மிரல் செவிலியர் எனக்கு எப்படி உதவ முடியும்?

- நீங்கள் நேசிக்கின்ற நபரைத் தொடர்புகொள்வது உங்களுக்குச் சிரமமானதாக இருந்தால், அவருடன் தொடர்புகொள்ள உங்களுக்கு உதவுவதற்கு திறன்களும் நுணுக்கங்களும் உள்ள ஒரு அட்மிரல் செவிலியர் தயாராக இருக்கிறார்.
- மறதிநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் பயம் அல்லது மனவேதனை கொண்டிருந்தால், ஒரு அட்மிரல் செவிலியர் இதைத் தடுப்பதற்கான அல்லது சமாளிப்பதற்கான சிறப்பான வழிகளைக் கண்டுபிடிக்க உங்களுடன் இணைந்து செயல்படுவார்.
- அதைச் சமாளிப்பதற்கு உங்கள் குடும்பம் தடுமாறினால், சிறப்புமிக்க கூடுதலான கவனிப்பையும் ஆதரவையும் நீங்கள் பெற உதவுவதற்கு ஒரு அட்மிரல் செவிலியர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்.
- உங்களுக்கு பதில் கிடைக்காத கேள்விகள் ஏதாவது இருந்தால் அட்மிரல் செவிலியர் உரிய நேரம் எடுத்துக்கொண்டு அந்தப் பிரச்சனையை உண்மையிலேயே புரிந்துகொள்வதோடு, அதைக் கையாளுவதற்கு உங்களுக்குத் தேவைப்படுகின்ற வல்லுநரின் ஆதரவையும் உங்களுக்கு வழங்குவார்.

அறக்கட்டளையை நிறுவிய ஜோசப் லெவி *CBE BEM* குடும்பத்தினரால் அட்மிரல் செவிலியர்கள் என்று பெயரிடப்பட்டது. ஜோசப் இரத்த நாள மறதிநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். கடற்பயணத்தில் அவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக அவர் “அட்மிரல் ஜோ” என அன்புடன் அழைக்கப்பட்டார்.



அட்மிரல்செவிலியர்களுக்கு டிமென்ஷியா யுகே நிறுவனம் தொடர்ச்சியான பயிற்சியும்,மேம்பாடும், ஆதரவும்வழங்குகிறது. ஒவ்வொரு அட்மிரல் செவிலிச் சேவையும் டிமென்ஷியா யுகே –வுக்கும் கூட்டு நிறுவனத்துக்கும் இடையிலான கூட்டு உடன்பாட்டின் மூலம் செயல்படுத்தப்படுகிறது, கூட்டு நிறுவனத்தில் NHS, உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் இதர அறக்கட்டளைகள் உள்ளடங்கும்.

செவிலியர்கள் மறதிநோய் பராமரிப்பில் நிலவுகின்ற சமீபத்திய கல்வி மற்றும் ஆராய்ச்சியில் முன்னணி வகிக்கும் விதமாக அவர்களுடைய பயிற்சி மற்றும் முன்னேற்றத்துக்கான திட்டம் ஒன்றை டிமென்ஷியா யுகே செயல்படுத்துகிறது. அவர்களின் ஆதரவைப் பெற்றுள்ள குடும்பங்கள் உண்மையிலேயே நிபுணத்துவம் கொண்ட மற்றும் அவர்களின் சார்பாக கவனித்துக்கொள்கின்ற ஒருவரின் ஆதரவைப் பெறுகிறார்கள்.

ஒரு அட்மிரல் செவிலியரின் ஆதரவு தேவைப்படுகின்ற ஒவ்வொருவரும் ஒருவரைப் பெற வேண்டும் என்று நாங்கள் ஆர்வத்துடன் நம்புகிறோம், எனவே யுகே முழுவதும் அட்மிரல் செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பது எங்களுடைய மிகப்பெரிய முன்னுரிமையாக இருக்கிறது. எங்களுக்கு உதவுவதற்கு, அல்லது எங்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு, பார்வையிடவும் www.dementiauk.org.

"புயலில் உள்ள கலங்கரை விளக்கத்தைப் போல, என்னுடைய அட்மிரல் செவிலியர் என் வழியின் ஒவ்வொரு அடியிலும் எனக்குத் துணையாக இருக்கிறார், என்னுடைய அச்சத்தைப் போக்குகிறார் மற்றும் எனக்குத் தேவைப்படுகின்ற உதவிக்கு எனக்கு வழிகாட்டுகிறார்"

Dementia UK
Helping families face dementia

# உங்களுடைய உள்ளூர் அட்மிரல் தாதிகள் சேவையைத் தொடர்புகொள்ளவும்

## ஆலோசனை மற்றும் ஆதரவு

ஆலோசனைக்கும் ஆதரவுக்கும், அட்மிரல் செவிலியரைத் தொடர்புகொள்க மறதிநோய்க்கான உதவித் தொலைபேசி
எண் 0800 888 6678, அல்லது
மின்னஞ்சல் **helpline@dementiauk.org**

## டிமென்ஷியா யுகே-ஐத் தொடர்புகொள்ளவும்

info@dementiauk.org
**www.dementiauk.org**

## ஆதரவு அட்மிரல் தாதிகள்

எங்களுடைய முக்கியப் பணிக்குத் தேவையான நிதிக்காக நாங்கள் தனிபற்றவர்களின் நன்கொடைகளை நம்பியிருக்கிறோம். நன்கொடைகள் வழங்குவதன்மூலம்குடும்பங்கள்தங்களுக்குத்தேவையானசிறப்புமறதிநோய் கவனிப்பையும் ஆதரவையும் பெறுகின்றன. நன்றி.

தயவுசெய்து 0300 365 5500 என்ற எண்ணில் அழைக்கவும்
அல்லது **www.dementiauk.org/donate** ஐப் பார்வையிடவும்
உங்கள் கவனத்திற்கு - உதவி மையத்தில் ஆங்கிலம் பேசும் செவிலியர் மட்டுமே இருப்பார்கள்

© டிமென்ஷியா யுகே 2019
டிமென்ஷியா யுகே ஆனது இங்கிலாந்து மற்றும் வேல்ஸிலும் (1039404), ஸ்காட்லாந்திலும் (SC047429) பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு அறக்கட்டளை ஆகும்.

Registered with FUNDRAISING REGULATOR

DUKIL05